தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, மார்கழி 3 (17-12-'60). சனிக்கிழமை | இதழ் 27

ஏமாற்றுகிறார்களா ?

அருப்பைக் கிழார்.

விளம்பர முறைகள் பலவிதம்; வணிக முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள். அவர்களுடைய சரக்குகள் மக்களின் கவனத்தைக் கவர்வதற்காகச் செய்கின்ற தந்திரம் வாய்ந்த விளம்பர வகைகள் ஏராளம்.

பாண்டியன் நெடுஞ்செழியன் கொலு வீற்றிருந்தான். அப்போது வைர வியாபாரி ஒருவன் அரசவையில் தோன்றினான். அவனிடம் ஏராளமான வைரங்களிருந்தன.

அந்தக் கண்பறிக்கும் தண்ணொளி வைரங்களை ஒரு பொற்றட்டில் பரப்பி அரசனிடம் நீட்டி; "அரசே. இந்த வைரங்களில் போலிகளும் கலந்துள்ளன. போலிகளைப் பிரித்து ஒதுக்கித் தரும் திறம் உடையவர்க்கு விலைமிகக உண்மை வைரம் ஒன்றை பரிசளிக்கக் காத்திருக்கிறேன்'' என்றான்.

பாண்டியன் இதைக் கேட்டதும் முதலில் அலட்சியமாக நினைத்தான். அவையோரை விளித்து "பேரவைப் பெரியீர்! கோவா மலையாரம், கோத்த கடலாரம், தேவர்கோன் பூணாரம் ஆகிய அனைத்தும், எனது அறமும் மறமும் உறைந்த விரிமார்பில் இடம் பெற்றுள்ளன. இந்த வணிக வேந்தர் போலி வைரங்களைக் கண்டறிவார்க்கு ஒரு வைரம் பரிசளிப்பேன் என்கிறார். நான் இச்சிறு பரிசை விரும்பவில்லை, விரும்பியவர் இவ்வைரங்களை ஆராய்ந்து பரிசு பெற வேண்டுகிறேன்'' என்றான்.

அவையிலிருந்த புலவர் ஒருவர் வந்தார். வியாபாரியின் வைர மணிகளை ஆராய்ந்து பரிசு பெற்றார் என்பர். எங்கள் அமுத சஞ்சீவித் தைலமும் அத்தகையதே, போலிகள் பல நடமாடுகின்றன. அவற்றிலிருந்து பிரித்து எங்கள் தைலத்தைக் கண்டறிவோர் உண்மையான பலன் என்னும் 'பரிசு' பெறுகின்றனர்.

இது விளம்பர வகையில் ஒன்று. பாண்டியன் பேரை விவரித்துத் தைலத்திற்கு விற்பனை வழிதேட இப்படி ஏதேதோ சொல்லப் படுகிறதல்லவா?

பாண்டியன் அரசவைக்கும் அமுத சஞ்சீவித் தைலத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இருந்தும், பாண்டியனின் அரசவையும் பிறவும் இழுக்கப்பட்டுள்ளன! ஏன்? பாண்டியன் புகழப்படுகிறான். அவன் பெயரை எழுதினால் மக்கள் ஆர்வத்துடன் படிப்பார்கள். அதன் தொடர்பில் தைலவிளம்பரமும் சேர்ந்தால் மக்களின் கவனத்தில் அது இடம் பெறுமல்லவா?

இந்த விளம்பர முறை, வியாபாரத்திற்கு மட்டுமல்ல—அரசியல் ஆதிக்கக் காரருக்கும் உதவுகிறது!

"தென்னாட்டுக்குத் தொழில் வளமில்லை 3 ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தென்னாடு மோசம் செய்யப் பட்டிருக்கிறது, என்பது தி. மு. க. வின் நீண்ட நாளையக் குற்றச்சாட்டு

இந்தக் குற்றச் சாட்டுகளை வடவரோ, அவர்தம் வாலேந்திகளோ எவரும் இதுவரை மறுத்ததில்லை—மறுக்க முடியவில்லை. ஆனால் திறமை யெல்லாம் சேர்த்து மழுப்பி வந்திருக்கிறார்கள்!

மழுப்பிக் கொண்டே எத்தனை நாளை—எத்தனை பேரைக் கடத்த முடியும்? முடியவில்லை! வாலேந்திகள் மத்தியிலே சிலர் "தி. மு. க. சொல்வது நியாயந்தானே!'' என்றனர்.

அதற்கும் அசையவில்லை இங்குள்ள அடிமை அமைச்சர்கள்! முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது சொன்னார்கள் : "அங்கெல்லாம்ஆறுகள் உள்ளன, அதனால் அணை கட்டுகிறார்கள். இங்கே என்ன இருக்கிறது அணை கட்ட?'' என்று கேட்டுவிட்டு ஏதோ கேள்விக்குப் பதிலை மேதாவித்தனமாகச் சொல்லி விட்டது போல் தலை நிமிர்ந்து நின்றனர்.

'தென்னாடு மோசம் போகிறது'' என்பது அடிமை மந்திரிகளிடம் கேட்கும் ஐயவினா அல்ல. அறிவை வடநாட்டான் காலடியில் பறிகொடுத்தவர்கள் இதனை ஓர் ஐய வினா போல் எண்ணிப் பதில் விடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலைமையில் 2-வது ஐந்தாண்டுத் திட்டமும் உருப்பெற்றது. பிலாய், துர்க்காப்பூர், ரூர்கேலா ஆகிய மூன்றிடங்களில்-வடநாட்டில் உருக்காலைகள் தோன்றும் என்று சேதி தெரிந்தது.

வடபுலக் கோலேந்திகளுக்கு வாலேந்தும் பெருமை பெற்ற சென்னை செயிண்ட் சார்ஜ் கோட்டை அடிமைகளை இடித்துக் கேட்டது திமுக "ஆறுகளில்லை அதனால் அணைகளில்லை'' என்று. அடிவருடும் புத்தியால் அலட்சியம் பேசிய அஜமந்தங்களே! "இதோ ரூர்கேலாவும், பிலாயும், துர்க்காபூரும் செப்பீல்டாக சுவிட்சர்லாந்தாக சுவீடனாக வளர்கின்றன பாரீர்'' என்று.

டில்லிக்குநடந்து நடந்து மூளையை முழங்காலுக்கு இறக்கிக் கொண்ட முழுமக்களுக்கு அப்போதும் உறைக்கவில்லை திமுக கூறியது. 3-வது ஐந்தாண்டுத் திட்டமும் உருப்பெற்றது. சென்னைக்கு 3-ம் திட்டத்தில் என்ன? இந்த முழங்கால் மூளையாளர்கள் டில்லிக்குஓடினார்கள் "இரண்டு டன்திருமண்ணும்ஒருடன் திருச்சுன்னமும் சென்னைகு அனுப்பப்படும் போய் வாருங்கள்'' என்றார்கள், டில்லி கோலேந்திகள்! இந்த வாலேந்திகள் வாலைமடக்கிக் கொண்டு சென்னைக்குத் திரும்பினர்!

திரும்பியதுடன் நில்லாமல் திருமண்ணும் திருச்சுன்னமும் அனுப்புகிற, கொடுமையை வஞ்சகத்தை—வாயாரக் கூறி முறையிட்டனர்.

இந்த அடிமைகளின் முறையீட்டை அச்சிட்டசெய்தித்தாட்களில் இன்னும் மை உலர வில்லை!

அதற்குள் 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னைக்கு ஏதோ செய்யப்போவதாகவும், அதிலும் சேலத்து இரும்பை எடுத்து, நெய்வேலி நிலக்கரியால் உருக்கப் போவதாகவும் செய்தி வெள்ளம் பாய்ச்சுகின்றனர்!

எத்தனை துணிச்சலான வெற்று வேட்டு! 1962ஐ நினைத்து வெளியிடும் வெற்று வேட்டுதானே இது.

வெற்று வேட்டுக்கூட வெறும் போடாகப் போடவில்லை! வேலையற்ற மந்திரிகள் காமராசர், சுப்பிரமணியம் இரண்டு பேரும் அரசாங்கச் செலவில் ரூர்கேலா துர்க்காபூர் பிலாய் சாம்செட்பூர் ஆகிய நான்கு இடங்களுக்குப் போய் அங்குள்ள உருக்காலைகளைப் பார்வையிட்டு வந்தார்களாம்!

எத்தனை வேடிக்கையான விளம்பரம் பாருங்கள்!

உண்மையாகவே சேலத்தில் உருக்காலை அமைவதாக வாதத்திற்கு ஒப்புக்கொள்வோம். அதற்காக இவர்கள் போய் உருக்காலைகளைப் பார்வையிடுவதால் என்ன பயன்?

இவர்களுக்கு இரும்பைப்பற்றியும் உருக்காலைகளைப்பற்றியும் என்ன தெரியும்?

அங்குள்ள இரும்புக் கனியின் தரத்தையும் இங்குள்ள இரும்புக் கனியின் தரத்தையும் ஒப்புநோக்கி சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிக்கை தருமாறு நிபுணர்களை அனுப்பினால் பயனுண்டு, அதை விடுத்து "ஆகட்டும் பார்க்கலாம்'' படித்த காமராசரும் "வழக்காடல்'' படித்த சுப்பிரமணியமும், உருக்காலைகளைப் பார்த்து வருவதால் என்ன பயன்?—வெற்று விளம்பரம் என்பதைத் தவிர!

3-வது ஐந்தாண்டுத் திட்டத்திலும் 'சென்னைக்கு ஒன்றுமில்லை' என்று தீர்ந்த பிறகு "சேலத்தில் உருக்காலை'' என்பது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக இந்த தரகர்கள் செய்யும் கட்டுப்பாடான தடபுடல் நாடகமே தவிர வேறென்ன?

1962 தேர்தலில் இந்த வடதிசை வாலேந்திகள் வரமுடியாது என்பதற்காக இப்போதிருந்தே ஏமாற்ற முயற்சிக்கிறார்களா? அல்லது சித்தரஞ்சன் இரயில் இஞ்சின் தொழிற்சாலைக்குப் பதிலாக பெரம்பூரில் தச்சுப்பட்டறை ஒன்றை ஏற்படுத்தி இதுவும் இரயில் தொழிற்சாலைதான் என்று பித்தலாட்டம் செய்ததைப் போல.

சேலத்தில் ஒரு கொல்லன் பட்டறையை ஏற்படுத்தி "இதோ உருக்காலை பாரீர்!'' என்று தம்பட்டம் அடிக்க முயற்சிக்கிறார்களா?

இவர்கள் என்ன பித்தலாட்டம் செய்தாலும் தமிழ்நாடு ஏமாறப் போவதில்லை.

உண்மையாகவே சேலத்தில் உருக்காலை தோன்றினாலும் அது சென்னையின் இழப்பிற்கு ஈடாகாது.

3 திட்டங்களிலும் ஏறக்குறைய 20 ஆயிரம் கோடி ரூபாய் வடவரின் வளத்திற்காகச் செலவாகி வருகிறது.

அதில் தமிழகம் பெற்ற பங்கு என்ன? மிகமிக ஏமாற்றம்—மோசடி! வடநாட்டான் சோப்பு முதல் சீப்பும், சைக்கிளிலிருந்து பெருந் தொழில் யந்திரங்களும் செய்து, தென்னாட்டை சந்தையாக்கிச் சுரண்டுகிறான் இந்தச் சுரண்டல் முறையை எல்லாரும் புரிந்து விட்டார்கள். புரிந்ததுடன் சுதந்திர த்திராவிடம் பெறத் துடிக்கிறார்கள்.

அந்தத் துடிப்பை 1962 தேர்தலில் வாலேந்திகளுக்கு எதிராகக் கிடைக்கும் வாக்குச் சீட்டுக்கள் காட்டத்தான் போகின்றன.

அதற்கிடையில் பாண்டியன் நெடுஞ்செழியனைக் காட்டிவரும் அமுத சஞ்சீவித் தைல விளம்பரம் போல சேலத்து இரும்பை தி. மு. கவினர் பிரபலப்படுத்திவிட்டதால் அதனைக் காட்டி தேர்தல் விளம்பரம் தேடி ஏமாற வேண்டாமென எத்தர்களை எச்சரிக்கிறோம்.

பல்லவர்கோன் புகழ் நந்தி

"தேனருவி"
தியாகன்

பல்லவ மன்னனுன நந்திவர்மனுடன் அந்தரங்கக் காதல் கொண்டு அனுபவித்து பழ்பவள், நாட்டியக் கணிகை செவ்வல்லி. பத்து நாட்களாக அவளுக்கு ஒரே கவலை; காரணம், நந்தி அவளைப் பார்க்க வராததுதான்-காதற் கவலையால் செவ்வல்லி படும் கடுந்துயரைக் கண்டு, அவளின் தோழியான மஞ்சு அவளைக் கேலி செய்கிருள். அந்நேரம், அங்கே நந்திவர்மன் வந்து விடுகிருன்.

நந்தி:- செவ்வல்லி......

செவ்வல்லி:- ....

நந்தி:- இல்லந்தேடி வந்திருக்கிருனே உன் ஏழைக் காதலன். அவனைக் கொஞ்சம் உள்ளந் திறந்து பேசி-உதடு திறந்து கொடுத்து......

செவ்வல்லி:- மன்னவரே...!

நந்தி:- ஏன் கண்ணே ?

செவ்வல்லி:- புதிய இடந்தேடிப் போயிருந்தீர்களோ?

நந்தி:- எதற்கு ?

செவ்வல்லி:- போர் செய்ய...!

நந்தி :- இல்லையே !

செவ்வல்லி:- இல்லையா ?-அரண்மனையில்தான் இருந்தீர்களா ?

நந்தி :- ஆமாம்......

செவ்வல்லி:- அரண்மனை அலுவல்கள் அதிகமாயிருந்திருக்கும் இல்லையா மன்னவரே ?

நந்தி : - ஆமாம் கண்ணே !

செவ்வல்லி :- அலுவல்கள் அதிகமாகி விட்டதால்தானே மறதியும் அதிகமாகி விட்டது-இல்லையா மன்னவரே ?

நந்தி :- .... ?

செவ்வல்லி :- அதனுல்தானே-அல்லி என்ெருரு பரிதாபத்துக்குரிய ஆட்டக்காரி இருக்கிருளே-அவள் என்ன ஆனுளோ என்பதைக் கூடப் பத்து நாளாக மறந்து விட்டீர்கள்...மன்னவர்களுக்குச் சின்னவர்களைப் பற்றியெல்லாம் நினைப்பதற்கு நேரமிருக்கவா போகிறது ?

நந்தி :- அல்லி-ஒவ்வொரு நாளும் நந்தியின் நாட்டுக்கு எல்லைகள் மட்டுமா விரிகிறது-அந்த அளவுக்கு அவனுக்குத் தொல்லைகளுமல்லவா வளர்கிறது-இதைச் சொன்னுல் உனக்கெங்கே புரிகிறது,

செவ்வல்லி :- ஐயோ பாவம்-தொல்லைகளா எங்கே? அந்தப்புரத்திலா ?

நந்தி :- அடாடாடா-நீ பேசு-உனக்கு எவ்வளவு முடியுமோ - அவ்வளவு பேசு. வெல்ல முடியாத பரமன்னர்களையெல்லாம் வென்றவனை பல்லவர்கோன் புகழ் நந்தி யென்று பாராட்டுகிருர்களே அப்பாவிகள் - அவன் இங்கே, அல்லியென்ற அழகி ஒருவளின் சொல்ல முடியாத கோபத்திற்கு முன் எதுவும் செய்ய முடியாத ஊமையாக ஒடுங்கி ஆமையாக நிற்கிருன் என்று-அவர்களுக்குத் தெரியவா போகிறது-நீ பேசு. ஆட்டிப் படைக்கும்அதிகாரம் படைத்த மன்னனையே ஆட்டிப்படைக்கிருள் அல்லி-அவளால் ஆட்டிப் படைக்கப்படுகிருன் நந்தி-அப்பப்பா காதல் கொடிது-அதிலும் உன் ஊடல் மிகக் கொடிது-நீ பேசு.

செவ்வல்லி :- பிறகென்னவாம்-பத்து நாட்களாகத் தாங்கள் இந்தப் பக்கமே வராவிட்டால் ?

நந்தி :- வருகின்ற இரவெல்லாம் வீணுகிறதே-நிலவு தருகின்ற பாலெல்லாம் பாழாகிறதே-என்று நீ வருந்தி இருப்பாய் இல்லையா ? அல்லி-பத்துநாள் பாக்கியையும் இன்று மொத்தமாகச் சேர்த்து-என்ன?

செவ்வல்லி :- சரி-சரி...காவலரே-கைவிரல்களை இப்படி விருப்பத்திற்கா விளையாட விடுவது? கொஞ்சம் கட்டுப் படுத்தி வைக்கக் கூடாதோ?

[தொடர்ந்து, இன்பம்-இன்பம்-இன்பம்]

காட்சி 3

[கையணையைத் தலையணையாக் கொண்டு, நெஞ்சணைகள் அழுந்தப் பஞ்சணையில் சாய்ந்திக்கிருள் செவ்வல்லி-மஞ்சு வருகிருள் அங்கே]

மஞ்சு :- என்னம்மா இரவு அசதி இன்னுமா போகல?

செவ்வல்லி :- ஏண்டி சும்மா இருக்க மாட்ட?

மஞ்சு :- ஐயயோ-மைதோய்ந்த் கண்கள்-மருதோணி தோய்ந்த கைகள் மாதிரி இல்ல சிவந்து போயிருக்குது.

செவ்வல்லி :- சே-வாயமூடு (உற்றுக் கவனித்து) யாருடி கீழ பாடுவது ?

மஞ்சு :- தெரியலேயே !

[செவ்வல்லியும் மஞ்சுவும் மாடியில் நின்றபடித் தெருவைப் பார்க்கின்றனர்]

காடவன் :- [ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு பாடிக் கொண்டிருக்கிருன்]

மங்கையர்கண் புனல்பொழிய மழைபொழியுங் காலம்
மாரவேள் சிலைகுனிக்க மயில்குனிக்கும் காலம்
கொங்கைகளும் கொன்றைகளும் பொன்சொரியும் காலம்
கோகனக நகைமுல்லை முகைநகைக்கும் காலம்
செங்கைமுகில் அனையகொடைச் சொம்பொன் பெய் ஏகந்
தியாகியெனும் நந்தியருள் சேராத காலம்
அங்குயிரும் இங்குடலும் ஆனமழைக் காலம்
அவரரெருவர் நாமொருவர் ஆனகொடுங் காலம்

செவ்வல்லி :- (மாடியில் நின்றபடியே) ஆகா-எவ்வளவு அற்புதமான-பாடல்-என்ன உருக்கமான கருத்து. ஏய் மஞ்சு...

மஞ்சு :- என்னம்மா?

செவ்வல்லி :- அதோ பாடிக் கொண்டிருக்கிருரே-அவரை மாடிக்கு அழைத்துக் கொண்டு வா-ஓடு சீக்கிரம் ஓடடி.........

[மஞ்சு கீழே பாடிக் கொண்டிருந்த காடவனை மாடிக்கு அழைத்துக் கொண்டு வருகிருள்]

செவ்வல்லி :- வணக்கம்-நான்தான் உங்களை அழைத்து வரச் சொன்னேன். அமருங்கள்.

காடவன் :- அழைத்தது நீதானு ?

செவ்வல்லி :- ஆமாம்-சுவையான பாடல்களைப் படிப்பதிலும் கேட்பதிலும், எனக்கு மிகையான விருப்பமும் வேட்கையும் உண்டு. நீங்கள் பாடிய பாடல் இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது-என்றுமே எனக்கது மறக்காது. மஞ்சு பால் கொண்டு வாடி. தாங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள் ?

காடவன் :- என்னையா கேட்கிருய் அஹ்-ஹ-ஹ-ஹா-பல்லவ நாடு முழுவதுமே எனக்குச் சொந்தந்தான்...எங்கு பசிக்கிறதோ அங்கு உண்டு, எங்கு திண்ணை தென்படுகிறதோ அங்கு உறங்கி, ஏகாங்கியாகத் திரியும் நாடோடியம்மா நான்.

செவ்வல்லி :- தாங்களா ?

காடவன் :- ஆமாம்-ஏன் ? நேற்றிரவு இங்கு நந்திமன்னன் வந்து போனனே-அப்பொழுதுகூட உன் வீட்டுத் திண்ணையில்தானே நான் படுத்திருந்தேன்-பார்க்கவில்லையா நீ ?

செவ்வல்லி :- என்ன ? (இதைக் கேட்டதும் அல்லி அதிர்ச்சியடைகிருள்)

காடவன் :- அஹ்ஹ-ஹ-ஹா...யாருக்குமே தெரியாதென நீ நினைத்திருந்த இந்த ரகசியம் எனக்குத் எப்படித் தெரிந்துவிட்டதென ஆச்சிரியப்படுகிருய் அல்லவா ?

செவ்வல்லி :- ....?

காடவன் :- அல்லி-உன்னை யாரென்று நானறிவேன் - ஆனல் என்னை யாரென்று நீயறியாய் பல்லவப் பேரரசுக்கு மன்னவன் யாரென்ற பயங்கர ரகசியத்தையே அடக்கி வைத்துக்கொண்டு ஏங்கித் திரியும் இதயமம்மா இது. இந்தச் சாதாரண ரகசியங்களையெல்லாம் வெளியே சொல்லிச் சம்பந்தப்பட்டவர்களுக்கு -அது சஞ்சலத்தை உண்டுபண்ணுது-நீ கவலைப்படாதே.

செவ்வல்லி:-என்ன சொல்லுகிறீர்கள்?

காடவன் :- அல்லி-நான் சொல்லி இதை உனக்குப் புரிய வைப்பது கடினம். நானே கேட்கிறேன். நீயே சொல்லு-அப்பொழுதுதான் அது உனக்கே புரியும்.

அல்லி :- என்ன கேட்கிறீர்கள் ?

காடவன் :- நீ நந்திவர்மனை மனப் பூர்வமாகக் காதலிக்கிருய்-அவனும் உன்னை மனப் பூர்வமாகக் காதலிப்பதாகவும் நீ நம்புகிருய்-அல்லவா ?

செவ் :- ஆமாம்......

காடவன் :- நீதியையும் நேர்மையையும் நந்தி காப்பாற்றக் கூடியவனுக இருந்தால், காதலித்த உன்னை அவன் ஊரறிய அல்லவா ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்? அப்படி ஏற்றுக் கொள்ள அவனுல் இயலா விட்டால்-உன்னை காதலித்திருக்கவே அல்லவா கூடாது. உனது உறவும் வேண்டும். ஆனுல் அது ஊருக்கும் தெரியக் கூடாது. இப்படித் தானே அவன் கருதுகிருன். ஏன் கருதுகிருன் ? காரணம் ?

அல்லி :- அவர் நாடாளும் மன்னர்-நான் நாட்டிய மாடும் கணிகை-மன்னரின் தகுதிக்கும் தரத்திற்கும் இந்த உறவு உகந்ததல்ல-மக்களுக்கு இதுதெரிந்தால் என்னையும் அவரையும் சேர்த்துத் தூற்றுவரே அதனுல்தான்-

காடவன் :- நாடாளும் மன்னவன், நாட்டியமாடும் கணிகையோடு உறவு கொள்வது சரியல்ல-முறையல்ல என்று கூறக் கூடிய மக்கள்-நாட்டியமாடும் கணிகையொருவளுக்குப் பிறந்தவனையே தங்கள் நாடாளும் மன்னனுக்கியிருக்கிருர்களே-இதுமட்டும் முறையா பெண்ணே, நீயோ சொல்லு.

அல்லி :- (பெருங்குழப்பத்துடன்) என்ன சொல்கிறீர்கள் தாங்கள் ?

காடவன் :- உனது காதலன்-இந்த நாட்டின் காவலன்-புகழ் நந்திவர்மப் போத்தரையன்-தந்திவர்மனுக்கு ஒருநாட்டியக் கணிகையிடம்பிறந்த மகனென்று சொல்லுகிறேன்.

செவ்வல்லி :- என்ன ?

காடவன் :- பெண்ணே நான் சொல்வது உண்மை. உண்மையிலும் உண்மை. முறைப்படித் தந்திவர்மனுக்குப் பட்டத்து இராணியிடம் பிறந்தவர்கள் ஒருவரல்ல-நால்வர். அவர்கள் சாகவில்லை; இன்னும் உயிரோடுதான் உலவுகிருர்கள். நாடாள வேண்டியவர்கள்-நந்தி செய்த நயவஞ்சகத்தால்

(3-ம் பக்கம் பார்க்க)

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 17-12-'60 | இதழ் 27

பெருபாரி

நாளுக்கு நாள் அரசியற் குழப்பங்கள் அதிகமாகி வரும் இன்றைய இந்தியாவில்—

நேருவுக்குத் "தலைவேதனை"யைக் கொடுக்கத் தொடங்கியிருக்கும் பெருவாரியான பிரச்சினைகளில்-பெருபாரிப் பிரச்சினையும் ஒன்று.

நாலரைச் சதுர மைல் பரப்புடைய இது—

மேற்கு வங்கத்தின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது இன்று.

இதை, இந்திய உபகண்டத்தின் முதல்வராகிய பண்டித நேரு-இப்பகுதி மக்களையும் கேளாது, மேற்கு வங்க அரசையும் மதியாது பாகிஸ்த்தான் அரசுடன் இணைத்துக்கொள்ள தன் மனப்பூர்வமான சம்மதத்தை அவர்களுக்கு உடன்படிக்கை மூலம் அளித்துவிட்டு,

வருகின்ற டிசம்பர் 31-ந்தேதி பெருபாரி பாகிஸ் தானுடன் இணையும் என்ற செய்தியை வங்க மாநில அரசுக்குத் தெரிவித்தார்.

செய்தியறிந்த வங்கம் சினந்தெழுந்தது.

எங்களைக் கேளாது பெருபாரியைப் பாகிஸ்தானுக்குத் தர நேரு சம்மதமளித்தது—

வார்த்தெடுத்த சர்வாதிகாரம் நிரம்பிய எதேச்சதிகாரப் போக்கு.

நாங்கள் இதற்குச் சம்மதியோம்.

எங்களை அடுத்த நாட்டுக்கு அடிமைகளாக்கும் உரிமை நேருவுக்கு கிடையாது.

ஒருபோதும் பெருபாரியை இழக்கமாட்டோம்.

வங்கத்தின் மக்கள் மட்டுமல்ல, வங்க சட்ட சபை எதிர்க்கட்சி உறுப்பினர்களிலிருந்து, வங்க முதலமைச்சர் பி. சி. ராய் உட்பட இதை வன்மையாகக் கண்டித்து எதிர்த்தனர்.

இப்பிரச்சினை குறித்து டில்லிப் பாராளுமன்றத்திலே எழுந்த வாதத்தில் இதை முழு மூச்சுடன் எதிர்த்து நேருவின் தவறை சுட்டிக்காட்டி-பெருபாரியை ஒருபோதும் இழக்கமாட்டோம் என்று உறுதியோடு கூறிவிட்டார் வங்க முதலமைச்சர் பி. சி. ராய்.

வங்கத்தின் பக்கமிருந்த நியாயத்தை ஆதரித்தும்-நேருவின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்தும், டில்லிப் பாராளுமன்றத்திலிருக்கும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கூடி கண்டன அறிக்கைகள் வெளியிட்டனர்.

"வங்கத்தின் உடலில் முக்கியமான உறுப்பு ஒன்று கொடூரமாக வெட்டப்பட்டு, தலைமை அமைச்சரின் தன் மானத்தைக் காக்கத் தானமாக அளிக்கப்படுகிறது."

"தனது மானம் காப்பாற்றப்பட்டுவிட்டது என்று தலைமை அமைச்சர் நினைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் உண்மையில் மானம் காப்பாற்றப்பட்டதா? இல்லை; ஒருபோதும் இல்லை. இலாபம் என்ற பொய்த் தோற்றம் கண்ணில் தென்படுகிறது. அதே சமயத்தில் மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் அரசாங்கம் என்ற தத்துவம் மண்ணோடு மண்ணாகிவிட்டது. தங்களுடன் ஒன்றியிருந்த ஆயிரக்கணக்கான சகோதர சகோதரிகளைப் பாதுகாக்கும் உரிமை மேற்கு வங்க மக்களிடமிருந்து வலுக்கட்டாய மாகப் பறிக்கப் பட்டு விட்டது.

"பெருபாரிச் சிக்கலினால் மக்கள் மனம் புண்பட்டு விட்டது. ஏற்கனவே வாழ்விழந்து அகதியாக வந்தவர்கள் மீண்டும் அகதிகளாவதற்கு நேரு ஒப்புக்கொண்டிருக்கிறார்."

இப்படி ஆச்சாரியார் அவர்களும் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதியிலுள்ள பல்வேறு அரசியற்கட்சித் தலைவர்களும் இப்பிரச்சினை அநியாயமான தென்று கண்டித்துக் கொண்டு வரும் இந்நேரத்தில்-

"பெருபாரியை ஒருபோதும் இழக்கச் சம்மதியோம்" என வீர முழக்கமிட்ட வங்க முதலமைச்சர் திரு. பி. சி. ராய் 13-ந் தேதி நடந்த வங்க சட்டமன்றத்தில் தன் உறுதியைத் தளர்த்தி வங்க மக்களின் அதிருப்திக்கு ஆளாகி இருக்கிறார்.

"சரியோ, தவறோ பண்டித நேரு, மற்றொரு நாட்டின் தலைமை அமைச்சருடன் ஓர் உடன் பாட்டுக்கு வந்து விட்டார். கொடுத்த வாக்குறுதியை நாம் காப்பாற்றவில்லையென பாகிஸ்தானோ மற்ற உலக நாடுகளோ குற்றஞ் சாட்டுவதற்கு இடமளிக்க நான் விரும்பவில்லை. இந்த உடன் படிக்கை நியாயமற்றதாகவோ, அரசியல் சட்டத்துக்கு முரணானதாகவோ, சட்டத்திற்குப் புறம்பானதாகவோ இருக்கலாம். ஆயினும் இந்த உடன் படிக்கையை ஏற்றுக் கொள்வதே சிறந்த வழி என்று நான் கருதுகிறேன்."

இப்படி நேருவின் விருப்பத்திற்கு வளைந்து கொடுத்துப் பேசிவிட்டார்-

இதன் விளைவு—

வங்க சட்ட சபையில்,

நாற்காலிகள் பறந்தன.

அங்கத்தினரின் மண்டைகள் உடைபட்டன.

மைக்குகள் வளைக்கப்பட்டன.

ஆசனங்கள் மீது ஏறி நின்றுகொண்டு 'வெட்கம்-வெட்கம்' என எதிர்க்கட்சி மெம்பர்கள் கத்தினர்.

அறுபது வயதான சுயேச்சை அங்கத்தினர் சசன்கசேகர் சபாநாயகரின் பதவிச் சின்னத்தைப் பறித்து எதிர்க்கட்சி மெம்பர் ஒருவரிடம் கொடுத்தார்.

கை கலப்புகள் நடந்தன.

சபா நாயகர் வெளியேறினார்.

சட்டசபை தொடர்ந்து நடைபெற வழியில்லை; முடிவுற்றது.

மேற்கொண்டு பெருபாரிப் பிரச்சினையை சுப்ரீம் கோர்ட்டில் வழக்காட எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

மேற்கு வங்க சட்டசபை அங்கத்தினர்களும்-மந்திரிசபையைச் சார்ந்தோரும் கும்பலாக இராஜினாமாச் செய்ய வேண்டுமெனும் அறிக்கைகள் பறக்கின்றன.

தொடர்ந்து, ஆட்சேப தினங்களும் கண்டனக் கூட்டங்களும்-வேலை நிறுத்தமும் நடைபெறும்.

மக்களும் எதிர்க்கட்சியினரும் மாநில அரசையும் மத்திய அரசையும் ஒரே நேரத்தில் எதிர்த்துப் போராட வேண்டிய சூழ்நிலை இன்று வங்கத்தில் உருவாகி விட்டது,

இந்தப் புயல் இனி எளிதில் அடங்காது,

தொடர்ந்து வங்கத்தில் கிளர்ச்சிகள் உருவாகப் போவது உறுதி-கெட்டிக்கப்பட்ட தோட்டாக்களின் துணைகளை நம்பி அரசியல் பரிபாலனம் பண்ணும் பஞ்சசீலப் பண்டிதரின் ஆட்சி-அவர்கள் மீது அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விடப் போவதும் உறுதி.

வங்கத்தின் சிங்கமென மக்களால் கருதப்பட்ட பி. சி. ராய்; நியாயமற்றதென்று தனக்கு நெஞ்சாரத் தெரியும் ஒரு காரியத்தை நேருவுக்காகவும்-கட்சிக்காகவும் சரியென்று ஒத்துக்கொள்ளக்கூடிய நிர்ப்பந்தத்துக்கு கொண்டுவரப்பட்டு விட்டார்.

இந்தியாவில் இப்பொழுது நடைபெறுவது மக்களாட்சி இல்லை என்பதை, இரண்டுமுறை தேர்தலுக்கு நின்று தோற்ற குப்தாவை காங்கிரஸ் தலைமைப் பீடம் உத்திரப் பிரதேசத்தில் முதன் மந்திரியாக்கியதிலிருந்து நாடு உணர்ந்தது.

பெருபாரிப் பிரச்சினையோ-யாரையும் கேளாது, எவரையும் மதிக்காது, எந்த மாநிலத்தின் எந்தப் பகுதியையும் எந்த நாட்டுக் காரனுக்கும் கொடுக்கும் சர்வாதிகார ஆற்றல் தனக்குண்டு என்பதை முடி சூடாமன்னராகிய நேருவின் செய்கை காட்டி விட்டது.

வங்கம் வழங்கப்போகும் முடிவு-நல்ல முடிவாக முடியட்டும். நேருவின் சர்வாதிகாரத்தின் முடிவாக இந்த முடிவு முடியட்டும்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

இப்போது நாடோடிகளாக அலைகிறார்கள். ஆனால் நாடோடியாக அலைய வேண்டிய நந்தி நயவஞ்சகத்தால் நாடாள்கிறான்.

செவ்வல்லி :- கவிஞரே-இனிமையானபாடல்களைக் கேட்டு மகிழலாமென்றல்லவா தங்களை அழைத்தேன். ஏன் இப்படிக் குழப்பமான செய்திகளைக் கூறி என்னைக் கலங்க வைக்கிறீர்கள்? நந்திமன்னரின் புகழையும் பெருமையையும் சுந்தரத் தமிழில் சுவையாகப் பாடிவிட்டு அவரைப் பற்றி இந்த விதமாகவும் இழித்துக் கூறி விட்டீர்களே ? ஏன் ?

காடவன் :- பெண்ணே-நந்தி வீரன்-வெற்றி வீரன் வீரர்கள் போற்றும் வீரன், விவேகி. விவேகியர் போற்றும் விவேகி-வள்ளல்-வரையாது கொடுக்கும் வள்ளல்-அள்ளிக் கொடுக்கும் வள்ளல். இவைகளை ஒருக்காலும் மறுக்கவில்லைநான்-ஆனால் அவன் மன்னல்ல மன்னனாவது முறையுமல்ல.

செவ்வல்லி :- (ஆத்திரத்துடன்) போதும் புலவரே-போதும். நந்தி காவலனாக இருந்தாலும் சரி-சேவகனாக இருந்தாலும் சரி-அவரை நான் என் காதலனாகத் தான் கருதுகிறேன். இந்த உறவு ஒன்றைத் தவிர-நான் அவரிடமிருந்து வேறு எந்தப் பலனையும் எதிர் பார்க்கவில்லை.

காடவன் :- பெண்ணே நீ அறியாது செய்யும் தவறுகளுக்காக ஒரு நாள் அநியாயமாக வருந்தப் போகிறாய்-நான் உன்னை அறிந்த காரணத்தால் தான் எனக்குத் தெரிந்த காரியத்தை சொன்னேன்.

[காடவன் போகும்போது தன் கையில் கொண்டு வந்த ஏட்டுச் சுவடியைச் செவ்வல்லி வீட்டில் விட்டுச் சென்று விடுகிறான்]

(தொடரும்)

முடிவின் தொடக்கம்

கண்ணதாசன்

[2]

அவர்களுக்கு எப்படியோ இருந்தது.

பெண்குரல்!—உலகத்தில் ஒரு பெண் உயிரோடு இருக்கிருளா ?

இது பெண்ணின் குரல்தாஞ ?

நான்கு பேரும் காதுகளைத் தடவிக் கொடுத்துத் திருப்பி விட்டுக் கேட்டார்கள்.

அவர்கள் கண்கள் மலர்ந்தன.

பெண்ணின் குரலைக் கேட்டு எத்தனை நாளாகிவிட்டது !

சர்வாதிகார வெறித்தனத்தில் ஊறி ஊறி மரத்துப்போன அதிகார இதயங்கள், தனிமையில் எளிமை பெறத் தொடங்கின.

இப்போது மென்மையும் பெற்றன.

ஆடாமல் அசையாமல் அந்தக் குரலைக் கேட்டார்கள்.

இனிமையான பாடல் ஒன்று அந்தக் குரலில் இழைந்து வந்தது.

"ஏ மரங்களே ! பறவைகளே !"

"உலகைப் படைத்தவன் யாரென்பது உங்களுக்குத் தெரியுமா ?"

"அவன் பெயரை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா ?"

"இதைப் படைப்பதற்காக அவன் பட்ட சிரமங்களை நீங்கள் அறிவீர்களா ?"

"பறந்து திரியும் பறவைகளே !"

"கடுகு போன்ற கண்களையும், மெழுகு போன்ற உடலமைப்பையும் உங்களுக்கு அவன் தந்தான்."

"உங்களுக்குப் பசியை வைத்தான்."

"பசிக்கு உணவைப் படைத்தான்."

"அந்த உணவே நமக்கு ஏற்றதென உங்களை உணரச் செய்தான்."

"உங்கள் இனம் வளர்ந்து வளர்ந்து, உங்களுக்குத் தேவையான பொருள்கள் கிடைக்காமற் போய்விடும் நிலையைத் தடுக்க - உங்களுக்கும் முடிவை வைத்தான்."

"பூச்சிகளைத் தின்று நீங்கள் வாழ்கிறீர்கள்."

"அந்த உயிர்களைத் தின்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்குமாஞல்—

உங்களைத் தின்பதற்கும் சிலருக்கு உரிமை வேண்டுமல்லவா?"

"அவன் மனிதர்களைப் படைத்தான்."

"மனிதர்கள் உங்களைத் தின்று தின்று உங்கள் வளர்ச்சியை ஒரு வரையறைக்குள் வைத்தார்கள்."

"ஆஞல்—

அவர்கள் வளர ஆரம்பித்தார்கள்."

"அவர்கள் அதிகமாக வளர வளர - அவர்களுக்குத் தேவையான பொருள்கள் கிடைக்காமற் போய் விடுமல்லவா ?—

அதற்காக அவன் அவர்களுக்கும் முடிவை வைத்தான்."

"அந்த முடிவை இயற்கையிலும் வைத்தான்;

செயற்கையிலும் வைத்தான்."

"காலங்களால் வரும் இயற்கை மரணத்தையும்—

காரியங்களால் வரும் செயற்கை மரணத்தையும் கலந்து வைத்தான்.

"ஆசையை வைத்தான்."

"ஆசை வளர்ந்த இடத்தில் அழிவை வைத்தான்"

"பாசத்தை வைத்தான்."

"பாசம் வளர்ந்த இடத்தில் பயத்தை வைத்தான்."

"இன்பத்தை வைத்தான்."

"இன்பம் வளர்ந்த இடத்தில் துன்பத்தை வைத்தான்."

"தர்மத்தை வைத்தான்."

"தர்மம் வறண்டு விடாமலிருக்க அதர்மத்தை வைத்தான்."

"சிரிப்பை வைத்தான்."

"சிரிப்புக்கு மரியாதை கொடுக்க அழுகையை வைத்தான்."

"ஈகையை வைத்தான்."

"ஈகையை வளர்க்கவே வறுமையை வைத்தான்."

"இரக்கத்தை வைத்தான்."

"இரக்கம் வாழ்வதற்காகக் கொடுமையை வைத்தான்."

"மனிதனைப் படைக்கும்போது எச்சரிக்கையாகப் படைத்தான்."

"பார்க்கும் கண்களை இரண்டாகப் படைத்தான்."

"கேட்கும் காதுகளை இரண்டாகப் படைத்தான்."

"நடக்கும் கால்கள் இரண்டு."

"அணைக்கும் கைகள் இரண்டு."

"உடம்பை நேராக இரு கூறுகளாகப் பிளந்தால்—ஒரு பாதியைப்போல் மறுபாதி இருக்கும்படி உருவத்தைப் படைத்தான்."

"அனைத்தையும் இரண்டாகப் படைத்த அவன்-

எவ்வளவு அறிவுள்ளவஞக இருந்தால், இருதயத்தை மட்டும் ஒன்ருகப் படைத்திருப்பான் ?"

"நினைக்கின்ற இதயம் ஒன்று".

"அதைப் பேசுகின்ற வாய் ஒன்று"

"காமவிகார அங்கம் ஒன்று"

"எந்த அங்கங்கள் குழப்பங்களை வளர்க்குமோ-அந்த அங்கங்களை ஒன்ருேடு நிறுத்தி,விட்டான்."

"ஆஞல் பறவைகளே !"

"அந்த ஒன்றும் பயங்கரமாக உருவெடுத்தது."

"ஓர் இதயத்தில் மனிதன் கோடிச் சிந்தனைகளைக் குவித்துக் கொண்டான்."

"ஒருவாயில் முன்பின் தொடர்பில்லாத மூவாயிரம் விஷயங்களைப் பேச ஆரம்பித்தான்."

"ஒன்றுக்கு ஒன்று என்பதைக் காதலிலும் மறந்துவிட்டான்."

"அதஞல் படைத்தவன் நோக்கம் நிறை வேருமல் போய் விட்டதே என்று நீங்கள் வருந்தத் தேவையில்லை"

"அவன்தான் செயற்கை மரணத்தைப்படைத்திருக்கிருனே !"

"வெறிபிடித்த சிந்தனைகளில் போர்க்களங்கள் தோன்றின."

"அடக்கமற்ற பேச்சுக்களில் அடிதடிகள் தொடங்கின."

"முறையற்ற காதலில் கொலைகள் விழுந்தன."

"ஒன்றே சிந்தனையென்றிருந்தோரெல்லாம் தப்பிஞர்கள்."

"ஒன்றே சொல்லென அறிந்து பேசியவர்கள் பிழைத்தார்கள்."

"ஒன்றே காதலெனப் பண்பாடு கண்டவர்கள் வாழ்ந்தார்கள்."

"ஐயோ ! பறவைகளே !"

"ஒருவன் கையிலேயே தங்கள் அனைவரையும் ஒப்புக் கொடுத்த அதிகார தர்மம்-

அவர்களையும் பலி வாங்கிற்று !"

"படைத்தவன்-வாழும் பொறுப்பை மனிதர்களிடம் விட்டான்."

"மனிதர்கள் வாழவைக்கும் பொறுப்பைத் தலைவனிடம் விட்டார்கள்."

"தலைவனின் சிந்தனைக் கேற்ப அவர்கள் வளைந்தார்கள்,"

"தலைவன் அவர்களுக்குச் செயற்கை மரணத்தைக் காட்டி விட்டான்."

"நியாயங்களோடும் எச்சரிக்கையோடும் உலகத்தைப் படைத்தவன்-

படைப்பு முழுவதும் அழிந்த பிற்பாடும் வெளிவர மறுக்கிருன்."

"நான் படைத்துக் கொண்டேயிருக்கிறேன்."

"மனிதர்கள் அழித்துக் கொண்டே இருக்கிருர்கள்-

என்று அவனும் அலுத்து விட்டான்."

"பண்பாடும் பறவைகளே !"

"உங்களிலும் ஒருசிலரே மிச்சமிருக்கிறீர்கள்."

"உங்கள் வாழ்வும் சிலகாலமே !"

"நீங்கள் சாவதற்கு முன்ஞல், அந்தச் சர்வாதிகாரிகளைச் சந்திப்பீர்களேயாஞல்—

அவர்களுக்கு இந்தச் சேதியைச் சொல்லுங்கள்."

"ஏ - சர்வாதிகாரிகளே !"

"இப்போது உங்கள் மனம் அமைதி அடைந்திருக்கும்."

"எந்த ஆத்திரத்தில் உலகத்தை அழிக்க முற்பட்டீர்களோ-

அந்த ஆத்திரம் இப்போது உங்களை விட்டு அகன்றிருக்கும்."

"ஏவுகணைகளிலும், பறக்கும் குண்டுகளிலும் நீங்கள் காட்டிய திறமையைக் கொண்டு-

மறுபடியும் இந்த உலகத்தை உயிர்ப்பிக்க உங்களால் முடியுமா?"

"உலகத்தில் எவ்வளவோ நீங்கள் கண்டு பிடித்தீர்களே!'

"உயிர் என்பது என்ன என்பதைக் கண்டு பிடித்தீர்களா?'

"அதன் வடிவம் எப்படியிருக்கும்?"

"அது எதைக் கொண்டு செய்யப் பட்டது?"

"இந்த ஆராய்ச்சியில் நீங்கள் இறங்கியதுண்டா?"

"இப்படிச் செய்தால் உயிர் போகும் என்று சிந்தித்தீர்கள்."

"இப்படிச் செய்தால் உயிர்வரும் என்று எப்போது சிந்தித்தீர்கள்?"

"உங்கள் அறிவியலைக் கொண்டு உயிரின் மூலத்தை நீங்கள் தேடவில்லை."

"முடிவைத் தேடினீர்கள்."

"தொடங்கத் தெரியாதவன் முடிக்கக் கூடாது என்பது விதி."

"நீங்கள் தொடங்கி முடிக்கவில்லை-

முடிக்கத் தொடங்கினீர்கள்."

"உங்கள் உயிர்களை ஒருமுறை தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்."

"உயிர் என்பது நீரா-காற்றா-கனலா என்பதைக் கண்டு பிடியுங்கள்."

"படைத்தவன் யாரென்பதைக் கண்டுபிடிக்க நீங்கள் முயற்சிக்க வேண்டாம்."

"சர்வல்லமை படைத்த உங்கள் சக்தியால் அவனும் ஒருவேளை அழிந்து போயிருக்கக் கூடும்."

',உலகத்தை உயிர்ப்பிக்க நீங்களே முயற்சியுங்கள்."

"அது உங்களால் முடியாதென்றால்-போனால் போகிறது,

படைத்தவனையே மீண்டும் உயிர்ப்பித்து அவனைக் கொண்டே உலகத்தைப் படைக்கச் சொல்லுங்கள்."

"அதுவும் உங்களால் இயலாதென்றால்...

"அட முட்டாள்களே!"

"உங்கள் தவறுகளுக்காகக் கண்ணீர் விட்டுக் கதறுங்கள்."

"சோறு கேட்ட மக்களிடம் போரைக் கொண்டுபோய் நிறுத்திய பாவத்திற்கு-

விழுந்து புரண்டு கலங்குங்கள்."

"இனி நீங்கள் ஏது சொல்லி அழுதாலும் உங்கள் கணைகளை ஏவுவதற்குக் கூட ஆளில்லை!"

"நீங்கள் கெடுபிடி யுத்தம் செய்வீர்களே?"

"ஏன்?—இப்போது செய்து பாருங்களேன்."

"பைத்தியங்களே! பைத்தியங்களே!"

"உலக சமாதானம் உங்கள் கையிலிருந்தது."

"தர்ம நியாயம் உங்களையே எதிர்பார்த்தது."

"அமைதியை வாழவைத்து—ஆனந்த விழாக்களைக் கண்டு களிக்கக்கூடிய வாய்ப்பு உங்களுக்கிருந்தது."

"படைத்தவன் உங்களுக்குக் கொடுத்த ஒரே இதயம் படைப்பு முழுவதையும் அழித்துவிட்டது."

"நீங்கள் ஐக்கிய நாடுகள் சபையைக் கூட்டுவீர்களே?"

"அங்கே ஆவேசக் கூச்சலிட்டு ஆரவாரம் செய்வீர்களே!"

"முழக்கம் செய்தால் இனிக்கிறதென்று முழங்குவீர்களே!"

"அந்த நாடகம் இனி நடக்குமா?"

"நீங்கள்தான் நினைத்ததைச் செய்துவிட்டீர்களே!"

"இனிச் செய்ததை நினைத்துப் பாருங்கள்."

"உலகத்தின் முடிவை நீங்கள் தொடங்கிப் பார்த்தீர்கள்."

"இனி உலகத்தையே தொடங்கிப் பாருங்கள்."

"ஏ பறவைகளே!"

"இந்தச் செய்தியை ஒரு பெண் சொன்னதாக அவர்களுக்குச் சொல்லுங்கள்."

"முடிவுக்குத் தந்தையரான அந்த முதல்வர்களைப் பார்த்து—

முதலுக்குத் தாய் சொன்ன இந்தச் சேதியைச் சொல்லுங்கள்."

பாட்டு நின்றது.

இந்தப் பாட்டின் பொருள் நால்வருக்கும் புரிந்தது.

ஆனால் அவர்கள் பொருளைப் பற்றிக் கவலைப்படவில்லை.

பெண்ணல்லவா பாடினாள்?

அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும்.

கண், காது, இதழ், முத்தம், பொம்மெனப் பருத்து நிற்கும் மார்பு, அது விம்மி விம்மி இறங்கும் அழகு.........

அவர்கள் பெண்ணை நினைத்துப் பார்க்கத்தான் முடிந்தது.

அந்தப் பட்டினியிலும் அவர்களுக்குக் காமவிகாரம் பெருக்கெடுத்தது.

உடலுக்கே உணவு கிடைக்குமானால், வயிற்றைப்பற்றி என்ன கவலை.

அந்த நால்வரும் குரல்வந்த திக்கை நோக்கிப் புறப்பட்டார்கள்.

"அந்தப் பெண் கிடைத்தால் எனக்குத்தான்" என்று ஒருவன் சொன்னான்,"

"இல்லை எனக்குத்தான்—நான்தான் அழகன்" என்று இன்னொருவன் சொன்னான்.

"நான் நினைத்தால் அவளைத் தூக்கிக்கொண்டே போய் விடுவேன்" மூன்றாமவன் சொன்னான்.

அந்த "நான் நினைத்தால்"—அவனை இன்னும் விடவில்லை.

நான்காமவனும் சும்மா இருக்கவில்லை.

நான்கு பேரும் பழையபடி சண்டை போட ஆரம்பித்தார்கள்.

நான்கு பேருக்கும் ஒரேமாதிரித் துயரம் வந்தபோது-அவர்கள் நண்பர்களானார்கள்.

நான்கு பேருக்கும் ஒரே மாதிரியான ஆசை வந்துவிட்டதல்லவா?

அவர்கள் பகைவரானார்கள்.

சண்டை போட்டுக்கொண்டே மலையின்மீது ஏறத் தொடங்கினார்கள்.

தூரத்தில் நின்ற அந்தப் பெண்ணின் உருவம், அவர்கள் கண்ணில் தெரிந்தது.

கண்களைப் பறிக்கும் அந்தக் கட்டழகைக் கவனித்தபடியே நடந்தார்கள்.

உலகத்துப் பெண்களையெல்லாம் கைக்குள் வைத்துக்கொண்டிருந்த அவர்கள், ஒரு பெண்ணுக்காக ஓடிக்கொண்டிருந்தார்கள்.

ஏவுகணைகளைவிட்டு எண்பது வினாடிகளில் உலகத்தைச் சுற்ற வைத்த அவர்கள்—

காமன் ஏவிய கணையால் மயங்கி நடந்தார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையில் முழக்கமிட்ட அவர்கள் இதழ்கள்—

ஒரு பெண்ணின் இதழோடு ஐக்கியமாகத் துடித்தன.

அதோ! அதோ!

தும்பைப்பூபோன்ற நிறம்!

துல்லியமான பார்வை!

வெள்ளை உடை!

விரித்த கூந்தல்!

அந்தப் பெண் நின்றாள்!

அவளும் அவர்களைக் கவனித்தாள்!

(தொடரும்)

வெண்பாப் போட்டி-11.

★

திருக்குறள் தென்றல் வெண்பா!

இறுதி நாள் 24-12-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

24-12-60 வரை திருக்குறள் தென்றல்வெண்பா தொடர்ந்து இடம் பெறும்

பொங்கலோ! பொங்கல்!!

குறைந்த செலவில் அனுப்ப அழகிய பல வண்ண பொங்கல் வாழ்த்துக்கள், தக்க மேலுரையுடன் கொண்ட மாதிரி செட் ஒன்றுக்கு ரூ. 2/M. O. செய்து பெற்றுக் கொள்ளவும்.

பகுத்தறிவுப் பண்ணை

—: தஞ்சை :—

தாய்

ஒரு பொருள் ஒருவரிடம் இருக்கும் போது யாரும் அதன் பெருமையை உணர்வதில்லை அதுகைவிட்டுப்போன பின்னர்தான் அதன் அருமையை உணர முடியும். ' 'கட்டப்பட்டவனுக்குத்தான் தெரியும் காசருமை''; ''நிழலின் அருமை வெய்யிலில்தான் தெரியும்'' என்ற பழமொழிகள் இதை மெய்ப்பிக்கின்றன. ஆகவே, தாய் இருப்பவர்கள் தாயின் அருமையை உணர்வதைவிட, இளமையில் தாயை இழந்து தவித்தவர்கள் தான் தாயின் அருமை பெருமைகளை அதிகம் உணரமுடியும். அந்த ஒரு உறவு இல்லாததால் உலகில் ஏற்படும் துன்பங்களை அனுபவித்து, அந்த ஒரு உறவு மட்டும் இருந்தால் உலகில் எவ்வளவு பெரிய துன்பங்களையும் தாங்கிக்கொள்ளலாமே என்ற உணர்வு எற்படுகிறது.

மனிதன் உலகில் தோன்றிய பின்னர் தான் மற்ற உறவுகளை படிப்படியாக அறிந்துகொள்ள முடிகிறது. ஆனல் தாய் என்ற உறவு மட்டும் அவன் பிறப்பதற்கு முன்பே தோன்றிவிடுகிறது, குழந்தை பிறந்தவுடன் அழுகிறது. தாய் விரைந்து அதற்கு பால் கொடுத்து அழுகையை நிறுத்துகிருள். இயற்கையிலேயே ஏற்பட்ட பாச உணர்ச்சி இது.

இந்தத் தாய்மை, ஆறறிவுபடைத்த மனிதகுலத்துக்கு மட்டுமே உரித்தான பண்பு அல்ல. இது எல்லா உயிரினங்களுக்குமே பொதுவான ஒரு நியதி. பகுத்தறிவு பெற்ற காரணத்தால் மனிதர்கள் இந்த உறவை இறக்கும் வரை உறுதிப்படுத்துகிருர்கள். மிருகங்களில் அது இல்லை. கன்றுக்குப் பாலூட்டும் பசு, குட்டியைத் தூக்கிச் செல்லும் பூனை, குட்டியை இடுப்பில் சுமக்கும் குரங்கு குட்டியை வயிற்றில் உள்ள பையிலேயே வைத்திருக்கும் கங்காரு இவைகளுக்கும் தாய்மை இல்லாமலிருப்பதில்லையே ?

ஒரு பெண், 'தாய்மை'' பேறுபெற்ற பின்னர்தான் வாழ்க்கையில்முழுமையை அடைகிருள். தியாகத்தின் திருஉருவாகத் திகழ்கிருள். ஒரு பெண்ணின் வாழ்வில் ஒரே ஒருகணம் ஒரு ஊழிக் காலத்தின் அளவு மதிப்பும் முக்கியமும் பெற்றுவிடுகிறது, தான் தாயாகி விட்டோம் என்று அவள் அறியும் கணம்தான் அது. அந்தக் கணத்தில் அவள் உள்ளத்திலே எழும் பூரிப்புக்கும் உடலிலே தோன்றும் சிலிர்ப்புக்கும் இணையாக வேறு எந்த அனுபவமும் இருக்கமுடியாது. கோடி கோடி ஆண்டுகளாக சங்கிலித் தொடராக வரும் உயிர்க்குல வெள்ளத்தில், தான் ஒரு கரணையாக அமைந்ததில் அவளுக்கு ஏற்படும் பெருமையை எந்த வகையாலும் அளந்து காட்டிவிடமுடியாது.

தாய் - முகம் தெரியாப் பருவத்தே உள்ள உருத்தெரியா குழந்தை பிறப்பதற்கு முன்னரே ''பத்தியம்'' இருந்து, அந்தக் குழந்தைக்கு உடல் நலம் கெடாது பாதுகாக்கிருள். குழந்தை பிறந்த பிறகும் அதற்கு நோய் வராதிருக்க அது பால் குடிக்கும் காலம் வரையிலும் மருத்துண்ணுகிருள். தன் நலம் கெட்டாலும் குழந்தை நலம் கெடாதவாறு இரவு பகலாக கண்விழித்து ஆவன செய்கிருள். அக்குழந்தையின் எதிர்காலத்தை எண்ணி எண்ணி இறுமாப்பு எய்துகிருள். அவளது எண்ணங்களையும் ஆசைகளையும் தாலாட்டுப் பாட்டுமூலம் தொட்டிலாட்டுகிருள். இத்தகைய உணர்ச்சி ஏழை பணக்காரர் ஆகிய இரு சாராருக்கும் பொது.

அன்புக்குஉறைவிடமாகிய தாயினும் சிறந்த பண்பு இவ்வுலகில் இல்லை. தாயினும் அன்புடையாரை நாம் கண்டதில்லை. அந்தத் தாயின் உள்ளத்தில் தன் மக்களின் பால் பொங்கும்அன்பை அளப்பதற்கு கருவியும் மனிதன் அறிவால் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. தாயுள்ளத்தின் அன்பு எல்லை காணுதது. அன்னை தன் மக்களுக்கு ஆற்றும் அன்பு இணையில்லாதது. வேறு எந்தஉறவினர்க்கும் ஈடாக மற்ற ஒருவரைக் கொள்ளலாம். ஆனல் தாயின் இடத்திலோ ஒருவரையும் கொள்ள முடியாது. அவருடைய அன்பிற்குஇணையாக எந்த உலகத்திலும் மாற்றுக் காணமுடியாது. தன் மக்களுக்காக தன் உயிரைத் தியாகம் செய்யும் தாயின் அன்புக்கு உவமையாக எதையும் கூறமுடியாது

தாயினும் சிறந்த தனம் வேறு இல்லை. தாய் ஒரு நிகரற்ற செல்வம்.

தாய் அன்பு, அடித்த மகனை அணைக்கும் அழியாத அன்பன்றே அது!! காலால் உதைத்தாலும் தன் கைக் குழந்தையின் கையை கண்ணில் ஒற்றிக் கொள்ளும் அன்பன்றே அது!!! குழந்தை கையிலே சிறு காயம் பட்டு இரத்தம் கொட்டினும் கண்ணீர் விடுகின்ற அன்பன்றே அது !!!!

தாய்மைக்கு தேசத்தையேத் உவமையாக்கிய தெய்வத்திருநாடிது. ''பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'' என்பது அமரகவி பாரதி வாக்கு. தெய்வத் திருக்குணங்களை தாய்மையோடு இணைத்து அம்மையே! அப்பா !! ஒப்பிலா மணியே !!! என்று அன்னைக்கு முதலிடம் கொடுத்து வணங்கிய நாடிது. தாயிடம் உள்ளன் அன்பைக் காட்டிலும் வலிமை உடைய உணர்ச்சி வேறு இல்லை. அந்த அன்பில்தான் தெய்வீகம் ஒட்டிக் கொண்டிருக்கிறது. 'மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.'' என்கிறது உலகநீதி. அரிச்சுவடி வகுப்பிலேயே ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்பது ஒளவை வாக்கு ''தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை'' என்பது ஆன்ருேர் அறிவுரை ஈன்ருள் பசி காண்பதுதான் எல்லாவற்றிலும் கொடிய செயல் என்பதை 'ஈன்ருள் பசி காண்பாளாயினும் செய்யற்க சான்ருேர் பழிக்கும் வினை'' என்று திருவள்ளுவர் கூறுகிருர். ''ஈன்ருள் முகத்தேயும் இன்னுதால் என்மற்று சான்ருேர் முகத்துக் களி'' என்பது மற்ருெரு குறள். ''குடியைத் தாய்கூட வெறுத்தலால்'' என்பதால் தாய் மகனை வெறுக்கமாட்டாள் என்பது காணக்கிடக்கிறது. நாலடியாரில் ''தாய் என்று எல்லோராலும் சொல்லப்படுகிறவள் கருணையுடையவள்-தாயோடு ஒப்பாக எண்ண பிள்ளைகளுக்கு எதுவுமேயில்லை-பெற்று வளர்த்த தாயைவிட சிறந்தவர் எவருமே இல்லை'' என்ற பொருள் பதிந்த அடிகள் காணக்கிடக்கின்றன,

''எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது தாய்ச்செல்வமாகும். பிறசெல்வங்களை இழந்துவிடுவோமானல் முயன்ருல் அவற்றைத் திரும்பப் பெற்றுவிடலாம். தாய்ச்செல்வத்தை இழந்து விட்டால் அதை எவராலும் எவ்விதத்தும் திரும்பப் பெறமுடியாது. இழந்தது இழந்ததுதான் அச்செல்வம் இருந்த இடத்தை நிரப்பவோ ஈடு செய்யவோ எக்காலத்தும் எவராலும் இயலாத அவ்வளவு உயர்ந்த செல்வம் அது. தாய் தன் பிள்ளைகளிடத்துக் காட்டுகின்ற அன்பே தலையாய அன்பாகும். தன் பிள்ளைக்காக பரிந்து பேசுபவர்கள் தாயைவிட வேறு எவரும் இவ்வுலகத்தில் இல்லை என்பது முடிந்த முடிபாகும்.

—கி. ஆ. பெ. விசுவநாதம்.

தன் வயிற்றில் பிறக்கும் பிள்ளை பெரும் கல்வியாளனுய் - வீரனுய் - அன்பனுய் - நல்லவனுய் உலகில் வாழ்தல் வேண்டும் என்ற எண்ணத்தையே தாய் கொள்வது வழக்கம். பிள்ளை கெட்டொழிய வேண்டும் என்று தாய் ஒருபோதும் நினையாள். பிள்ளைகட்கு தொண்டு செய்யும் தாய் ஏதாவது பயன் கருதுகிருளா ? இல்லையே ! தாயுள்ளத்தில் இல்லாத கடவுள் வேறெங்கே இருக்கப்போகிருர். தன்னுயிர்கென ஒன்று இருப்பினும் அதை பிள்ளைகட்கு கொடுக்க தாய் சிறிதும் பின்னடையாள். பிள்ளைகட்காக தாய் செய்யும் தியாகத்தை இத்தகையதென்று எழுத்தால் எழுதமுடியாது, தாய் எனினும் அன்பெனினும் ஒக்கும்.

—தமிழ்ப்பெரியார் திரு. வி. க.

ஒரு பெண் பெற்ருேரின் மகளாக உள்ள வரையில் உரிமை மிகுந்தவளாக, அரசிளங் குமரியாக வாழ்கிருள், கணவனின் மனைவியாக வாழத்தொடங்கியதும் அரசியாகவும் அடிமையாகவும் மாறி மாறி வாழ்வதுபோல் விளங்குகிருள். தான் பெற்ற மக்களின் தாயாக வாழும்போது எல்லா உரிமைகளையும் உதறிவிட்டு அன்புருவாக உயர்கிருள். பிடிவாதம் செய்யும் ஒரு பெண்ணை இயற்கை இப்படி மாற்றி மாற்றி தியாகத்தின் திருவுருவாகச் செய்கிறது.

—டாக்டர் மு. வ.

-சங்கரி புத்திரன்.

தேர்தல் நிதி திரட்டத் தீவிரம் காட்டுவீர் !

1962-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் ஈடுபட, ஐந்து இலட்ச ரூபாய் நிதி திரட்டுவதென்றும் அதற்கு மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ரூ. 25,000-ம், மாநிலங்கள் ஒவ்வொன்றும் ரூ. 5000-ம் பிப்ரவரித் திங்களுக்குள் வழங்க வேண்டுமென்றும் மதுரையில் கூடிய தலைமைக் கழகச் செயற்குழு தீர்மானித்திருக்கிறது. அதன்படி மாவட்டங்களும், மாநிலங்களும் தத்தம் பங்குத் தொகையினைச் செலுத்துவதில் முந்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

பணத்தை வீசி வாக்குகளைப் பெறுவதற்காக நாம் நிதி திரட்டவில்லை. தேர்தல் காலத்தில் நமது கழகத்தின் திட்டங்களை விளக்கவும், நாட்டு நிலைமைகளை மக்கள் மன்றத்தில் எடுத்து வைக்கவும், பட்டி தொட்டிகளிலெல்லாம் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தவும், தேர்தல் நிதியாகக் குறைந்தது ஐந்து இலட்ச ரூபாயாவது இருந்தால்தான் 'கோடி'களைக் குவித்துக்கொண்டு கொக்கரிக்கும் காங்கிரசை எதிர்க்கும் சக்தியை நாம் பெறமுடியும்.

இந்த உண்மையை உணர்ந்த பிறகும் உறங்கிக்கொண்டிருப்பது முறையல்ல ! ''நாளைக்குப் பார்ப்போம் !'' என்று ஒத்திபோடுவதும் உகந்ததல்ல ! உடனடியாகக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கச்சை கட்டிக்கொண்டு காரியமாற்றத் தொடங்க வேண்டும்.

ஊருக்கு ஊர் சென்று உண்டியல் எடுத்தோ - நண்பர்களிடம் நாட்டு நிலையை விளக்கியோ - நீதியை நிலைநாட்டும் காரியத்திற்கு நேர்மையான முறையில் 'சிறுதுளி வெருவெள்ளம்' என்ற சீரிய நோக்கோடு தேர்தல் நிதியைப் பெருக்கிட வேண்டும்.

யாராவது வந்து கேட்டுத்தான் கொடுப்பது என்றில்லாமல், ஆர்வம் படைத்த தோழர்கள் தாங்களாகவே தேர்தல் நிதிக்கெனத் தங்களால் இயன்ற தொகையை அனுப்பிவைக்கும் உணர்வினைப் பெற வேண்டும்.

நிதி சேர்க்கும் முறைகளாக. சிறப்புக் கூட்டங்கள், நாடக நிகழ்ச்சிகள், கலை அரங்குகள் இவைகளை மட்டுமே நகரங்களில் மாத்திரமின்றி கிராமங்களிலும் நம்பியிருப்பது சரியல்ல; எதிர்பார்க்கும் பலனும் கிட்டாது. உருவான பலன் கிடைக்குமிடங்களில் மட்டுமே சிறப்புக் கூட்டம், நாடக, கலை நிகழ்ச்சிகள் போன்றவைகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பொதுக் கூட்டத்திற்கும் வருகை தருகிற தலைவர்கள்; சொற்பொழிவாளர்கள் வாயிலாகத் தேர்தல் நிதிக்குக் கணிசமான தொகையை அளிக்கும் முறையை அந்தந்த அமைப்புக்கள் வகுத்துக் கொள்ளலாம்.

இன்னும் இருப்பது ஓராண்டுக் காலம்தான். மாநில மாநாடு, மாவட்ட மாநாடுகளை நடத்தியாக வேண்டும். பணிகள் ஏராளமிருக்கின்றன. அதற்கிடையில் ஐந்து இலட்சத்தைத் திரட்டத் தோழர்கள் பாடுபட வேண்டும்.

ஜனநாயகக் கடமையாற்ற-நாடுவாழ-நலிவுநீங்க இன்றே முனைந்தெழுவீர் ! நீங்கள் சேர்த்தனுப்பும் ஒவ்வொரு காசும் மாசுமருவற்ற நமது கொள்கைகளை வெற்றிபெறச் செய்யும் தூயவழிக்குப் பயன்படுத்தப்படுவது ! திராவிடச் சமுதாயத்தின் சுதந்தர எதிர்காலத்தை உருவாக்கவல்லது !

அன்பன்,

மு. கருணாநிதி

(தலைமைக் கழகப் பொருளாளர்)

'அறிவகம்', சென்னை-13.

வெண்பாப் போட்டி

திருக்குறள் தென்றல் வெண்பா !

மண்ணினின் றோட்டுவேன் பாழடிமை வாழ்வையென்
றெண்ணியபோல் லிங்கன்தான் எய்தினனே !—தென்றலே
எண்ணிய எண்ணியாங் செய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

—வ தமிழரசு, சென்னை-21.

அண்ணனை வஞ்சித்த அற்பனும் வீடணனை
இன்றைக்கும் ஏசுகின்றார் இவ்வுலகோர்—தென்றலே !
எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

—கோ. சம்புமணிச் செழியன்.

"கிள்ளியிதழ் முத்தமிட்டார்; கார்கூந்தல் கோதியெனைப்
பள்ளியறைக் குள்சேர்த்தார்; தென்றலே !—நள்ளிரவில்
புல்லிக் கிடந்தேன்; புடைபெயர்ந்தேன்; அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு!"

—சா. கா. சா. "தளிர்மேனி", சித்தையன் கோட்டை.

மன்னன் நெடுஞ்செழியன் மாண்டகதை நாடறியும்
தென்னன் புகழ்பாடும் தென்றலே !—எந்நாளும்
ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை

—தெளிவை அ இளவழகன்.

ஒன்னார் சிறைவாயில் உண்ணீர் மறுத்தழிந்தான்
இன்னார் கணைக்கால் இரும்பொறைதான்—தென்றல் !
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்.

—"எழில் - ஜெயலட்சுமி", காஞ்சிபுரம்.

தென்றலே தாய்த்திரு நாட்டின் தளைபோக்க
நின்றோம் நிறைவொடு; திண்ணமாய்—வென்றிடலாம்
துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

வை நடராசன், சிங்காநல்லூர்.

"புன்மைமிகு சிங்களத்தைப் பூங்காவா மாற்றினோம்
இன்றவர் நம்மை இகழ்கின்றார்—தென்றலே
எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

—அ கி அழகர்சாமி, மதுரை.

மன்னவனும் பாவலனும் மாண்டார் வடக்கிருந்து
தென்னன் மலைப்பிறந்த தென்றலே !—முன்னாள்
புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.

—'எழிலரசன், மோட்டுப்பாளையம்.

வண்ணத் துகிலுடுத்தி வண்ணமயில் தன்னுடைய
சின்ன இடைதுவளச் செல்லுங்கால்—தென்றல் !
அணங்குகொல் ? ஆய்மயில் கொல்லோ ? கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு !

—பா. கிருட்டிணமூர்த்தி, சென்னை-11.

ஈட்டிய செல்வத்தை ஈந்து கலைவாணர்
ஏட்டில் புகலடைத்தார்; தென்றலே !—நாட்டினில்
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு.

—ர. இளங்கோவன், சென்னை-10.

முன்னேற்ற நற்கழகம் முன்னேறிச் சீர்மையுறல்
தென்னா டறியும்,உயர் தென்றலே !—பொன்னார்
முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

—பனை. பழநியப்பன், மேலைச்சிவபுரி.

குன்றுத மானம் குடிநீரால் குன்றுவதோ ?
என்றிறந்தான் சேரன் இரும்பொறை—தென்றல் !
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்.

—க பொ. இளம்வழுதி, கலிதீர்த்தான் குப்பம்,

"அண்ணல்" "இயேசு"வழி ஆன்றோர் புகழ்வதன்றோ ?
வண்ணத் தமிழ்பாடும் தென்றலே !—உண்மையிது
இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் !

—மு. வரதராசன், துறையூர்.

முன்னம் வடவர் இழித்துரைத்துக் கல்சுமந்தார்
தென்னகத்தில் வீசிவரும் தென்றலே—எந்நாளும்
யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

—கா. மும்தாசு திருப்பத்தூர்.

போய்வரவா பொன்கவிதை யாத்தழைத்தாய் ? உள்ளத்தில்
நோய்வரவா நூல்செய்தாய் ? தென்றலே !—ஆய்ந்தெடுத்தேன்
இன்னா தினனில்லூர் வாழ்தல் அதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு.

—பெ. து. பெரியசாமி, நல்லூர்.

அண்ணாவின் திட்டத்தை அற்பமெனத் தான் நடுவோர்
"ஜின்னா"வின் நாடதனைச் சிந்தியார்—என்னும் ?
அரியவென் றாகாத தில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின் !

—சௌதாராணி, மதுரை.

எண்ணம் பிறப்பித்த ஏற்றமுடை நல்லெழிலை
வண்ணம் கலையா வடிவழகை—தென்றலே !
"காணிற் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று."

—இரா. சீனியப்பன், மாங்குடி.

சின்னத் தொழிலுக்கும் தீய வடக்கினர்பால்
சென்னை குறையிரக்கச் செல்லுவதோ ?—தென்றலே
நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு.

—ச இராமசாமி, தஞ்சை.

நாடாளும் நேரு நமை "நான்சென்ஸ்" எனச்சொன்னார்
நாடுபுகழ் நன்மைசேர் தென்றலே—கேளாய்
தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

—பி. மயில்சாமி, அகிலாண்டபுரம்.

பொய்யாய்ப் புனைந்த புராணம் ஒருநாளும்
மெய்,யின்பம் தாராதே தென்றலே !—செய்யும்
அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழு மில.

—கதி. இளம்விழியன், கோவை-6.

தன்னை முரண்பட்டார் தம்மீது வெஞ்சினத்தால்
வன்சொல்லை நேரு வழங்குகின்றார்—தென்றலே !
தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

—ச. ஆதிராஜன், திருமலை.

எந்தலைவர் செம்பொருட்(கு) ஏகியதை நீயறிந்து
செந்தழலை வீசுகிறாய் தென்றலே !—என்றொழியும்
காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

—"பட்டிக்காட்டான்" நாமக்கல்.

சந்தாதாரர்களுக்கும் வாசகநேயர்களுக்கும்

தென்றல் பொங்கல் மலர், 1961.

அஞ்சல் மூலம் பெற விரும்பும் சந்தாதாரர்களும் ஏனைய வாசக நேயர்களும், 20—12—60 தேதிக்குள் ரூ 2-25 அனுப்பி தங்கள் பிரதிகளைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமோம்.

ஏஜண்டுகள் உள்ள இடங்களில் ஏஜண்டுகளிடம் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்.

நிர்வாகி

தென்றல்

காண்பீர் என்னை!

பொருள்தேட வெளிநாடு சென்றீர் அத்தான்!
பொருள்கிடைத்த தாலென்னை மறந்தீர் அந்தோ!
"அருள்சேரும் நல்வாழ்வைத் தருவேன்"; என்றே
அன்புடனே உரைசொன்னீர்; ஆனால் இன்றோ
இருள்சேரும் வாழ்வுதனைக் கொடுக்கும் எண்ணம்
என்னுயிரே உமக்குவரல் விந்தை! விந்தை!
மருள்சேரும் என்மனந்தான் மரிக்கும் முன்னர்
மன்னவரே வந்திடுவீர்! என்னைக் காண்பீர்!

அலைவீசும் கடலினிலே நாவாய் ஆடும்
அவலநிலைக் காட்சியது கண்ணில் தோன்றும்
சிலைமேனி உடன்வாடும்; சித்தம் நோகும்
திருவாளர் உம்செயலை நினைவிற் சேர்க்கும்!
வலைவீசும் திறமுடையீர் உங்கள் ஆசை
வனிதைக்கே ஏக்கம்தான் பரிசோ சொல்வீர்
கலைவீசும் கண்வாடிச் சாகும் முன்னர்
காதலரே வந்திடுவீர்! என்னைக் காண்பீர்!

பிரிவென்னும் கொடும்பாவி வதைக்கும் போக்கை
பெருமானே நீருணர்வீர் எனினும் ஏனோ
பரிவென்னும் நிலைசேர்த்தல் விட்டே ஆங்குப்
பகட்டாக வாழ்கின்றீர் இதுவோ நேர்மை!
எரிவென்னும் நிலையடையும் எந்தன் மேனி
எப்போதும் துயர்க்கடலில் வீழ்ந்தே நோகும்!
சரிவென்னும் நிலையுற்றுச் சாகும் முன்னர்
சற்குணரே வந்திடுவீர் என்னைக் காண்பீர்!

பூரிப்பில் சிறந்தொளிரும் உடலம் மெய்யாய்
பூவையரின் திறம்பேசும்; வளமை கொஞ்சும்
ஈரிப்புக் குணத்தாலே அவர்தம் நெஞ்சில்
இளகியதோர் இயல்புறையும்; ஆனால் இன்றோ
பாரிப்புக் குறைந்தழியும் செடியைப் போலும்
பைங்கிளிநான் வாடுகிறேன் முறையோ சொல்வீர்!
தாரிப்புக் குறைந்தேநான் தாழும் முன்னர்
தமிழ்மணியே வந்திடுவீர்! என்னைக் காண்பீர்!

பாகுமொழித் திறனெல்லாம் பாரில் வாழும்
பாவையர்கள் தம்மிடத்தே உண்டென் றாலும்
நோகுமொழி நானுரைப்பேன்; என்றன் வாழ்வும்
நோயதனிற் சிக்கிவிடும்; நானென் செய்வேன்!
வேகுமொழி தனைவடித்தே என்றன் உள்ளம்
வேதனையில் ஆழ்ந்திடல்தான் தகுமோ சொல்வீர்!
சாகுமொழி உரைத்தேநான் சாயும் முன்னர்
தமிழ்மகனே வந்திடுவீர்! என்னைக் காண்பீர்!

ஏச்செதுவும் வந்தாலும் தாங்கிக் கொள்ளும்
இயல்பெங்கள் இனத்தினிலே இல்லை, இல்லை!
பேச்சறியா ஊமைகளும் தங்கள் அன்பர்
பிரிவெண்ணிக் கதறுதல்தான் புவியில் உண்டு!
நீச்சதனில் திளைக்கின்ற மீனைத் தூக்கி
நெடுந்தரையில் போட்டொழித்தல் நேர்மை தானோ!
மூச்சடங்கி நான்மாண்டு மடியும் முன்னர்
மோகனரே வந்திடுவீர்! என்னைக் காண்பீர்!

தமிழ்ப்பித்தன்

தென்றல்

பொங்கல் மலர் 1961

மிகச் சிறப்பாகத் தயாரகிறது.

- **அறிஞர் அண்ணா**
- நாவலர் நெடுஞ்செழியன்
- சொல்லின் செல்வர் சம்பத்
- பேராசிரியர் அன்பழகன்
- சிந்தனைச் சிற்பி சிற்றரசு
- கே. ஏ. மதியழகன்
- க. அறிவழகன்
- தில்லை வில்லாளன்
- பன்மொழிப்புலவர் அப்பாதுரையார்
- டாக்டர் மு. வரதராசனார்
- டாக்டர் சிதம்பரநாதனார்
- டாக்டர் இராசமாணிக்கனார்
- தேவநேயப் பாவாணர்
- அ. மு. பரமசிவானந்தம்
- வாணிதாசன்
- முடியரசன்
- கம்பதாசன்
- இராதாமணாளன்
- எஸ். எஸ். தென்னரசு
- பி. சி. கணேசன்
- மா. தங்கவேலர்
- நா. பாண்டுரங்கன்
- அரு. ராமனாதன்
- அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி
- மெ. சுந்தரம்
- பேராசிரியர் மா. கி. தசரதன்
- இசையரசு தண்டபாணி தேசிகர்
- தமிழண்ணல்
- மா. சு. சம்பந்தன்

ஆகியோரின் நெஞ்சை அள்ளும் எழுத்தோவியங்கள் இடம் பெறுகின்றன.

அறிஞர் அண்ணா, சொற்செல்வர் ஆகியோரின் படங்கள் ஆர்ட் தாளில் அழகுற அச்சாகிறது.

'மாங்கனி' இசைப்பாடலுக்குத் தேன்கனி
விஜயலட்சுமி தரும் 'நாட்டிய முத்திரை'
கண்ணுக்கு விருந்தாக அமைகிறது.

ஆசிரியர் கண்ணதாசன் எழுதும்
கவிதை, சிறுகதை, தத்துவக் கட்டுரை
மலருக்கு மகுடம் சேர்ப்பவை.

விலை ரூபாய் 2.

தென்றல் சென்னை-6.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.